**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 69/2022**

**2024ம் ஆண்டு ஜுன் மாதம் 24-ஆம் தேதி திங்கட்கிழமை**

**வா.சா.1 நாச்சி**

**கு.வி (பிரதிவாதி தரப்பில்)**

நான் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் எனது வழக்குரைஞருக்கு விபரங்கள் கூறினேன். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என பரிகாரம் கோரியுள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோருரிமைக்கு நான் பதிலுரை தாக்கல் செய்யவில்லை. நான் பதிலுரை தாக்கல் செய்யாததால் எதிர்கோருரிமையை நான் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம் என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் 242/3 ஆகும். இதே தாவா சொத்திற்கு நான் மானாமதுரை மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் திருத்தப்பட்ட பிராது நான் வா.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.13 ஆவணத்தில் பத்தி 9ஏ - யில் தாவா சொத்து மற்றும் சில சொத்துக்களை மூத்த சகோதரரான பெரியாம்பிள்ளை என்பவர் பெயரில் கிரையம் பெற்று அனுபவித்து வந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீகத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பெரியாம்பிள்ளை, வீரணன், சின்னன்னன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டு அவர்கள் பாகம் பிரித்த பின்பு நாச்சம்மைக்கு கிடைத்து தாவா சொத்தை நான் மேற்படி நாச்சம்மையிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன். மேற்படி பாகப்பிரிவினை பற்றி எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்கு மூலத்தில் சொத்து முழுவதும் கருப்பணன் அம்பலத்திற்கு பாத்தியப்பட்டதாக சொல்லியிருந்தால் அது பொய். நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் நாச்சம்மை எனது அப்பாவின் உடன் பிறந்த சகோதரி. வா.சா.ஆ.2 ஆவணம் முழுமையாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் தாவா சொத்து பாகம் செய்யப்பட்டது

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நாச்சம்மை பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவங்களோ, செட்டில்மெண்ட் ஆவணங்களோ எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தற்பொழுது பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது. சின்னம்பலம் என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். இரண்டாவது மனைவி அய்யம்மாளுக்கு ஆண்டி அம்பலம், கருப்பணன் அம்பலம் ஆகியோர்கள் மகன்கள் என்றால் சரிதான். அய்யம்மாளுக்கு ஏதேனும் பாகம் ஒதுக்கப்பட்டதா என்பது எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கில் இநத பிரதிவாதி மற்றும் ஆண்டிஅம்பலம், கருப்பணன் அம்பலம் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்தார்கள் என்றால் ஆண்டிஅம்பலமும், கருப்பணன் அம்பலமும் ஆஜராகவில்லை, இந்த பிரதிவாதி மட்டும் ஆஜரானார். வா.சா.ஆ,14 அசல் வழக்கு எண் 256/2009 வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் ஆண்டிஅம்பலம், கருப்பணன் அம்பலம் ஆகியோர் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை விபரங்களை நான் கேட்டு தெரிந்து கொண்டேன். எதிர்வழக்குரையில் தாவா சொத்து பெரியாம்பிள்ளைக்கு மட்டும் பாத்தியப்பட்டது என சொல்லப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. அந்த விபரம் எனக்கு தெரிந்தும் நான் பிராதை உரிய திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண் 256/2009 வழக்கின் தீர்ப்பின் மீது இந்த நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கில் எனது பரிகாரத்தை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு சின்னன்னன் அம்பலம் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக ஆவணம் தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி எதிர்கோருரிமையுடன் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றி வழக்கறிஞரிடம் கேட்டுத்தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எஸ்.எல்.ஆர் ஆவணத்தில் தாவா சொத்து பெரியாம்பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பெரியாம்பிள்ளையின் ஆயுட்காலத்தில் 1968ல் தாவா சொத்து பொறுத்து பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு ஒரு ஒத்தி ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது. பெரியாம்பிள்ளை அவரது ஆயுட்காலத்திலேயே தாவா சொத்தை தனித்து அனுபவத்து வந்து அது சம்மந்தமாக பல்வேறு பதிவு ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அவருடைய ஆயுட்காலத்திற்கு பின்னர் வாரிசு என்ற அடிப்படையில் தாவா சொத்தை பிரதிவாதியின் தகப்பனாரான கருப்பணன் அம்பலமும், நாச்சி அம்பலமும் அடைந்து அனுபவம் செய்து வந்து தாவா சொத்து சம்மந்தமாக பல்வேறு பதிவு ஆவணங்கள் ஏற்படுத்தி தனித்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சித்தப்பா நாச்சி அம்பலத்திற்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். அதனால் மொத்த சொத்தையும் கருப்பணன் அம்பலம் அடைந்து பிரதிவாதி பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி தான செட்டில்மெண்ட்டிற்கு பின்னர் பிரதிவாதி தாவா சொத்தை அடைந்து தற்பொழுது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ராக்கு தான் தாவா சொத்திற்கு கிஸ்தி செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல. நாச்சம்மை பெயரில் கிரைய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு சின்னன்னன் அம்பலம் நாச்சம்மை பெயரில் எழுதிக்கொடுத்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக ஒரு கிரையம் சரியான உரிமையாளரிடம் இருந்து கிரையம் பெறவில்லை என்றால் அந்த கிரையம் செல்லாது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணங்கள் எழுதிக்கொடுப்பதற்கு நாச்சம்மைக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பெரியாம்பிள்ளைக்கு பாத்தியப்பட்டு அவரது வாரிசுகள் அடைந்து அனுபவித்து வந்த நிலையில் சின்னன்னன் அம்பலத்திற்கே எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ராக்கு பெயரில் தாவா சொத்திற்கு கிரைய ஆவணம் உள்ள விபரம் எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் 6 மாதத்திற்கு முன்பு தெரியவந்தது. மேற்படி கிரைய ஆவணம் செல்லாது என சட்ட உரிமைகோரி எந்த வழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த பரிகாரமும் கோரவில்லை என்பதால் பிரதிவாதியின் எதிர்கோருரிமை அனுமதிக்கத்தக்கது ஏ்னறால் சரியல்ல. தாவா சொத்தில் நாச்சம்மையோ, நானே எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்பட்டதால் பின்னிட்டு யோசனை செய்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே தாக்கல்

செய்த வழக்கில் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து குறிப்பிட்டு சொல்லியும் அந்த ஆவணத்தை சட்டப்படி செல்லாது என பரிகாரம் கோராததால் தற்பொழுது அந்த ஆவணத்தை நான் எதிர்ப்பதற்கு எனக்கு சட்டஉரிமை இல்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாச்சம்மை எனது சொந்த அத்தை என்பதால் தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் நானும் நாச்சம்மையும் சேர்ந்து உற்பத்தி செய்த மோசடி கிரையஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாச்சம்மை பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த பட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பெரியாம்பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாரிசுப்படி அடைந்து பிரதிவாதி அனுபவம் செய்து வருவதால் அந்த சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு எதிர்கோருரிமை அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**